வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 19.03.2026 வியாழக்கிழமை இதழ் : 72 பக்கங்கள் : 08




# தேர்தல் பிரசாரத்துக்காக மொஸாட்டிடம் ஒரு மில்லியன் டொலர் கோரினார் ஜே.ஆர்.

## இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் ஆவணங்கள் ஊடாக கசிந்தது தகவல்

கொழும்பு, மார்ச் 19

**முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 1987ஆம் ஆண்டு தனது தேர்தல் பிரசாரத்திற்காக இஸ்ரேலின் உளவு அமைப்பான மொஸாட்டிடம் இருந்து 1 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி கோரியதாக இரகசியம் நீக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.**



இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சகத்தின் பகுதி ரகசியம் நீக்கப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட தகவலின்படி, 1987 ஒகஸ்ட் 6 மற்றும் 14 திகதியிட்ட தூதரக தகவல் பரிமாற்றங்களில் மொஸாட் பிரதிநிதியுடன் நடைபெற்ற சந்திப்பில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக 07

## நிலக்கரி விவகாரம் குறித்து அநுர தவறான தகவல்களுடன் உள்ளார்!

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 19

நிலக்கரி கொள்முதல் தொடர்பான விவகாரம் குறித்து ஜனாதிபதி தவறான தகவல்களுடன் உள்ளார் என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக தாம் ஏற்கனவே லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையமஅத்தில் முறைப்பாடு அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 07

## எரிபொருள் முறைகேடுகளை அறிவிக்க தொலைபேசி எண்!

கொழும்பு, மார்ச் 19

எரிபொருள் விநியோகம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படும் எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று பிற்பகல் விடுத்துள்ள அறிக்கையில், இது தொடர்பான முறைகேடுகள் குறித்த தகவல்களை வழங்குவதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் விசேட தொலைபேசி இலக்கங்கள் 07

### கறுப்புக் கொடியேற்றல் தொடர்பாக

## 3 பேரை விசாரணைக்கு அழைத்ததைக் கண்டித்து யாழ். பல்கலை மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பு!

### அனைத்துத் தரப்பினரையும் ஆதரிக்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 19

சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை இறக்கி, கறுப்புக்கொடி ஏற்றிய சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மூவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டமையைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் இன்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்துப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக 07

## இலங்கைப் பொருளாதாரத்தை பாதுகாக்க ஐந்து பரிந்துரைகள்

### அரசிடம் முன்வைத்தது இலங்கை வர்த்தக சபை

கொழும்பு, மார்ச் 19

மத்திய கிழக்கில் நிலவி வரும் மோதலால் உலகளவில் உருவாகியுள்ள பொருளாதார அசாதாரண நிலையை முன்னிட்டு, இலங்கையின் பொருளாதாரத்தை பாதுகாக்க ஐந்து முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை வர்த்தகச் சபை அரசாங்கத்துக்கு பரிந்துரைத்துள்ளது.

நேற்று வெளியிட்ட அறிக்கையில், பொருளாதார நடவடிக்கைகள் 07

## பல இடங்களில் இன்று அதிக வெப்பநிலை!

கொழும்பு, மார்ச் 19

நாட்டின் பல மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் இன்று வெப்பமான காலநிலை நிலவக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் 07

## வீரவிலவில் இரு அரச பேருந்துகள் நேருக்கு நேர் மோதி கோர விபத்து!



### நான்கு பேர் உயிரிழப்பு!! 40இற்கும் மேற்பட்டோர் காயம்!!!

கொழும்பு, மார்ச் 19

அம்பலாந்தோட்டை - கதிர்காமம் பிரதான வீதியில் வீரவில பகுதியில் நேற்று இடம்பெற்ற பயங்கர வீதி விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகள் நேருக்கு 07

## இந்து சமுத்திரம் மோதல் வலயமாக இருக்கக்கூடாது!

### புதுடில்லியில் நாமல் வலியுறுத்து




புதுடில்லி, மார்ச் 19

இந்திய பெருங்கடல் ஒரு மோதல் வலயமாக அன்றி, நாகரிகங்களுக்கு இடையிலான ஒரு பாலமாகவே காணப்பட்டதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ 07

## குமார ஜயக்கொடிக்கு எதிரான பிரேரணை இன்று சபாநாயகரிடம்

கொழும்பு, மார்ச் 19

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்படவுள்ளது.

எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளது.

தரமற்ற நிலக்கரி விவகாரத்தை முன்னிலைப்படுத்தி, எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வர எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. 07

## நான் சொன்னதை கேட்டிருந்தால் அழிவு, இழப்புகள் நடந்திருக்காது!

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 19

கிடைத்த சந்தர்ப்பங்களில் எமது மக்களுக்கு பெற்றுக்கொடுத்த ஒவ்வொன்றையும் சேவையாக அல்லாது நான் கடமையாகவே முன்னெடுத்திருந்தேன். 07

## உண்மைகளை மறைத்து கற்பனை கதைகளை கூறுகின்றார் ஜனாதிபதி

### ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 19

உண்மையான நெருக்கடிகளை மறைத்து, ஜனாதிபதி அழகிய கற்பனைக் கதைகளைக் கூறி வருவதால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய நிர்வாகச் 07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா நெல் கொள்வனவில் வியாபாரிகளுக்கே முதலிடம்!

## கண்டுகொள்ளாத எம்.பி.க்கள்

வவுனியா, மார்ச் 19

அரசாங்கத்தால் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் வியாபாரிகளிடம் இருந்தே அதிகளவில் நெல் கொள்வனவு செய்யப்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அந்த நெல்லை தமது செல்வாக்கை பயன்படுத்தி நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பனை செய்து பெரும் இலாபம் ஈட்டி வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளின் நன்மை கருதி அரசாங்கம் நெல் கொள்வனவை மேற்கொள்வதாக தெரிவித்தபோதிலும் வியாபாரிகளே பெரும் இலாபமீட்டுவதாகக் கூறும் விவசாயிகள், நெல் கொள்வனவுக்கு புதிய நடைமுறையாக கமக்காரர் அமைப்புக்களின் சிபார்சுக் கடிதங்களுடன் வருபவர்களிடம் நெல்லை கொள்வனவு செய்யும் பட்சத்தில் விவசாயிகள் நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்குவதற்கு காத்திருக்கவேண்டிய தேவை ஏற்படாது எனவும் தெரிவித்தனர். (அ)

# கடற்றொழில் திணைக்களத்தின் அத்தியாவசிய சேவை புதனன்றும்!

கொழும்பு, மார்ச் 19

பொது நிர்வாக அமைச்சினால் புதன்கிழமைகள் அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் அத்தியாவசிய சேவைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த விடுமுறை நடைமுறைப்படுத் தப்பட்டாலும், கடற்றொழில்துறையின் 24 மணி நேரத் தேவையைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு உப அலுவலகம், அனைத்து துறைமுகச் செயற்பாட்டு அலுவலகங்கள், வானொலி தொடர்பாடல் நிலையங்கள் மற்றும் கலன் கண்காணிப்பு அலகு ஆகியன வழமை போன்று இயங்கும்.

இதன் மூலம் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் மீன் ஏற்றுமதியாளர்கள் தங்களது சேவைகளை எவ்வித இடையூறுமின்றி பெற்றுக்கொள்ள முடியும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. (அ)

# சைவப்புலவர் சங்க நிர்வாகசபை கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட நிர்வாக சபைக்கூட்டம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் நிர்வாக சபைக் கூட்டத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான நேரடி வழிகாட்டல் வகுப்பு ஆரம்பித்தல், பரீட்சை தொடர்பான விடயங்கள் மற்றும் முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளதனால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (அ)

# வடக்கு-கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வெப்பச்சலன செயற்பாடு மற்றும் கிழக்கு திசைக் காற்று முறிவின் காரணமாக இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் குறிப்பிடுகையில்,

குறிப்பாக கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளுக்கு கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இது வெப்பச் சலன செயல்பாட்டினால் கிடைக்கும் மழை என்பதனால் இடியுடன் கூடிய மழையாகவே இது கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆகவே இடி மின்னல் நிகழ்வுகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம் என அறிவுறுத்தியுள்ளார். (அ)

# சமையல் எரிவாயு விநியோகத்தை தடையின்றி முன்னெடுக்க ஏற்பாடு

## லிட்ரோ எரிவாயு நிறுவனம்

கொழும்பு, மார்ச் 19

நாட்டுக்குத் தேவையான சமையல் எரிவாயு விநியோகத்தை எவ்விதத் தடையுமின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதிவரை நாட்டுக்குத் தேவையான எரிவாயு கையிருப்பு போதியளவு உள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது மாலைதீவில் உள்ள சேமிப்பு நிலையங்களில் இந்த எரிவாயு கையிருப்புகள் வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து ஒவ்வொரு மூன்று நாட்களுக்கு ஒருமுறை எரிவாயு ஏற்றிய கப்பல்கள் இலங்கையை வந்தடையவுள்ளன.

அத்துடன், அமெரிக்காவிலிருந்து 33,000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இன்று மாலைதீவை வந்தடையவுள்ளதுடன், அதே அளவு எரிவாயு கொண்ட இன்னுமொரு கப்பல் ஏப்ரல் 20ஆம் திகதி அங்கு வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 3 மாதங்களுக்கு தேவையான அரிசி அரசிடம் கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 19

அரசாங்கத்திடம் 3 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அரிசியின் விலை அதிகரிக்கப்படாது எனவும் அமைச்சர் வசந்த சமரசிங்க கூறினார். (அ)

# 6ஆம் தர கல்வி மறுசீரமைப்பை 2027 இல் ஆரம்பிப்பதற்கு தயார்!

கொழும்பு, மார்ச் 19

6ஆம் தரத்திற்கான கல்வி மறுசீரமைப்புப் பணிகளை 2027ஆம் ஆண்டு ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாகவும், முதலாம் தரத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற உபகுழுவில் வலியுறுத்தப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற உபகுழு, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் கூடியது. இதன்போது, புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ-

2026ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாம் தரத்திற்கான புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் முன்னேற்றங்கள் இனிவரும் காலங்களில் கண்காணிக்கப்படும். முதலாம் தரத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளுக்கான செயற்பாடுகள் அடங்கிய நூல்களை அச்சிடுவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் தவணைக்கான செய்முறைச் செயற்பாட்டு நூல்களை ஏப்ரல் பாடசாலை விடுமுறையின் பின்னர் மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (அ)

# மாணவிகள் பற்றி சமூக ஊடகத்தில் அவதூறு; மாணவன் 14நாள் நன்னடத்தை காப்பகத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

சமூக ஊடகம் ஒன்றில், பாடசாலை மாணவிகளை அவதூறு செய்த பாடசாலை மாணவன் ஒருவரை 14 நாள்கள் சிறுவர் நன்னடத்தை காப்பகத்தில் தடுத்துவைக்க ஊர்காவற்றுறை நிதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த அவதூறு பரப்பியதை நியாயம் கேட்கச் சென்ற பாதிக்கப்பட்ட மாணவிகளின் உறவினர் ஒருவரை கூரிய ஆயுதமொன்றால் வெட்டிக் காயப்படுத்திய குற்றத்துக்காக குறித்த மாணவனின் தந்தையாரையும் 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் வேலணைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் மாணவி ஒருவரது புகைப்படம் மற்றும் இன்னொரு மாணவியின் தாயாரது தொலைபேசி இலக்கத்தையும் "ரிக்ரொக்" சமூக ஊடகத்தில் கீழ்த்தரமான பாலியல் ரீதியான வாசகங்களுடன் பதிவிட்டு அவதூறு பரப்பியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

குறித்த அவதூறால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவரது உறவினர்கள் அவதூறு பரப்பியவரின் வீட்டுக்குச் சென்று குறித்த மாணவனிடம் இது தொடர்பில் வினவியுள்ளனர்.

இதன்போது அவதூறு பரப்பிய மாணவனின் தந்தையார் நியாயம் கேட்கச் சென்ற ஒருவரை கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கிக் காயப்படுத்தால் குறித்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் ஊர்காவற்றுறை சிறுகுற்றப் பிரிவு பொலிஸில் இரு மாணவிகளின் பெற்றோரும் முறைப்பாடு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுத்த ஊர்காவற்றுறை சிறுகுற்றப் பிரிவு பொலிஸார் மாணவனையும் தந்தையையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இந்நிலையில் மாணவனை சிறுவர் நன்னடத்தை மையத்தில் 14 நாள்களும், மாணவனின் தந்தையை 14 நாள்களும் தடுத்து வைக்க நீதவான் உத தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

# இரு கப்பல்களில் வந்தது எரிவாயு

கொழும்பு, மார்ச் 19

திரவ பெற்றோலிய எரிவாயு ஏற்றிய இரண்டு கப்பல்கள் நேற்று காலை உஸ்வெட்டகெய்யாவ, தல்தியவத்தையில் உள்ள எரிவாயு இறக்கும் மிதவையை வந்தடைந்துள்ளன.

அதிலிருந்து எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
19.03.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## நேட்டோ நாடுகளைக் கெஞ்சும் ட்ரம்ப்

சுயமோகம், அதீத சுயநலமும் தற்பெருமையும், பரிவிரக்கமின்மை, புகழ்ச்சியை விரும்புதல், மற்றவர்களை அவமதித்தல், மற்றவர்களை தன்னலத் தேவைகளுக்காக பயன்படுத்துவதில் நாட்டம் - இந்த குணாதிசயங்களைக் கொண்டவர்கள் ஒரு விதமான மனநலக் கோளாறினால் (Narcissistic Persionality Disorder) பாதிக்கப்பட்டவர்களாக கருதப்படுகிறார்கள்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பட்டிருப்பதற்கான சகல குணங்குறிகளையும் கொண்டவராகக் காணப்படும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் தோன்றித்தனமாக ஈரானுக்கு எதிராக அநாவசியமாகத் தொடுத்த போர் உலகில் பொருளாதார நெருக்கடியையும் பாதகமான புவிசார் அரசியல் விளைகளையும் ஏற்படுத்திய பிறகு தற்போது தடுமாற்றத்துக்கு உள்ளாகி தனது உதவிக்கு வருமாறு ஏனைய நாடுகளை கெஞ்சி அழைக்கிறார்.

ஆனால், அமெரிக்கா தலைமையிலான வட அத்திலாந்திக் ஒப்பந்த இராணுவக் கூட்டணியின் (நேட்டோ) உறுப்பு நாடுகளோ அல்லது மற்றைய நாடுகளோ மத்திய கிழக்கு நெருக்கடிக்குள் அகப்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து ட்ரம்பின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டன.

ஈரான் மீது போர் தொடுத்தால் அந்த நாடு உலகின் எண்ணெய் மற்றும் பொருட்கள் விநியோகத்துக்கு முக்கியமானதாக விளங்கும் ஹோர்முஸ் நீரிணையை தடை செய்யும் என்பது ஏற்கெனவே எல்லோருக்கும் தெரிந்ததே. ஈரானின் கடற்படையையும் விமானப் படையையும் துவம்சம் செய்து விட்டதாகவும் போரில் ஏற்கெனவே வெற்றி பெற்று விட்டதாகவும் மார்தட்டிய ட்ரம்ப் ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க போர்க்கப்பல்களை அனுப்புமாறு கேட்டார்.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் முக்கியமான ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தொடுத்த போர் தங்களது போர் அல்ல என்று ட்ரம்பின் முத்தில் அறைந்தாற்போல் அறிவித்துவிட்டன. "நேட்டோ என்பது தற்காப்புக்கான கூட்டணியே (Defensive alliance) தவிர, மற்றைய நாடுகளில் தலையீடு செய்வதற்கான (Interventionist alliance) அல்ல " என்று ஜேர்மன் அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ் கூறிவிட்டார். (நேட்டோ செய்த தலையீடுகளுக்கு என்று தனியான பட்டியலே இருக்கிறது. அது இந்த இடத்தில் பொருத்தமில்லாத விடயம்)

"நேட்டோ உறுப்பு நாடுகளை பாதுகாக்க நான் சென்றோம். ஆனால், எமக்கு தேவை ஏற்படும்போது எம்மைப் பாதுகாக்க அந்த நாடுகள் வருவதில்லை. ஹோர்முஸ் நீரிணையை திறப்பதற்கு அமெரிக்காவின் நேச நாடுகள் உதவத் தவறினால் நேட்டோ ஒரு கெடுதியான எதிர்காலத்துக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்" என்று ட்ரம்ப் (வட அமெரிக்கையையும் ஐரோப்பாவையும் சேர்ந்த 32 நாடுகளை உள்ளடக்கியதாக) 77 வருடங்களாக நீடிக்கும் அந்த இராணுவக் கூட்டணிக்கு அபாயச்சங்கு ஊதியிருக்கிறார்.

ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதற்கு சீனா உதவி செய்யாவிட்டால் விரைவில் பெஜ்யிங்கில் ஜனாதிபதி சி ஜின்பிங்குடன் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த உச்சி மகாநாட்டை தாமதிக்கப் போவதாகவும் ட்ரம்ப் அச்சுறுத்தியிருக்கிறார். அவருடனான உச்சி மகாநாடு தாமதிக்கப்படக் கூடாது என்பதற்காக புத்தி! சுவாதீனமுடைய தலைவரைக் கொண்ட எந்தவொரு நாடாவது ஹோர்முஸ்"க்கு போர்க் கப்பல்களை அனுப்பி மத்திய கிழக்குப் போரிற்குள் அநாவசியமாகச் சிக்கிக் கொள்ளுமா?

ஈரானுக்கு எதிராக போரைத் தொடுப்பதற்கு முன்னரான நாட்களில் இந்தப் போரில் அமெரிக்காவுக்கு எந்த நாட்டினதும் உதவி தேவையில்லை என்று கர்வத்தனமாக செய்த அறிவிப்புக்கள் தற்போது தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகின்றன.

## ஹோர்முஸ் நீரிணை ஊடாகப் பயணிக்க ஒரு சில வணிகக் கப்பல்களுக்கு அனுமதி

தெஹ்ரான், மார்ச் 19

ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலிய போர் தீவிரமடைந்துள்ள நிலையில், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் நீரிணை ஊடாக ஒரு சில வணிகக் கப்பல்கள் பயணிக்க ஈரான் அனுமதி அளித்துள்ளதாக கப்பல் கண்காணிப்பு தரவுகள் தெரிவிப்பதாக அல்ஜெஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக முடங்கிக்கிடந்த இந்த நீரிணையில், திங்கட்கிழமை அன்று ஈரானிய கொடியல்லாத 8 வணிகக் கப்பல்கள் பயணிப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது முந்தைய நாள்களுடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பு வளர்ச்சியாகும்.

சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் கப்பல்களுக்கே ஈரான் அனுமதி அளிப்பதாக கடல்சார் புலனாய்வு நிறுவனமான விண்ட்வார்ட் தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளுடன் தொடர்புடைய கப்பல்கள் இந்த பகுதிக்குள் நுழைய ஈரான் அனுமதிக்கவில்லை.

போர் ஆரம்பமானதில் இருந்து இந்த நீரிணை ஊடான போக்குவரத்து 95 வீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு (20 வீதம்) இந்த நீரிணை ஊடாகவே நடைபெறுகிறது. தற்போது நிலவும் முடக்க நிலை காரணமாக, சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 100 டொலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இது போர் ஆரம்பமாவதற்கு முந்தைய விலையை விட 40 சதவீத அதிகரிப்பாகும்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நீரிணை திறந்தே உள்ளது, ஆனால் எமது எதிரிகளுக்கு அது மூடப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கடற்றொழிலாளர்களுக்கு தடையின்றி எரிபொருள் கிடைக்க புதிய நடைமுறை

கொழும்பு, மார்ச் 19

நாட்டின் கடற்றொழிலை எவ்வித தடையுமின்றி முன்னெடுத்துச் செல்வதற்காக புதிய எரிபொருளை முகாமைத்துவத் திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் தீர்மானங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.கே.காலித கமல் ஜினதாச தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் படகுகளுக்கான எரிபொருள் அந்தந்த துறைமுகங்கள் ஊடாக விநியோகிக்கப்படும். படகு கண்காணிப்பு அமைப்பு மூலம் படகின் பயணத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு, அவசியமான எரிபொருள் அளவு முறையாக முகாமைத்துவம் செய்யப்படும்.

சுமார் 30,000 சிறிய படகுகளுக்கு எரிபொருள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட சுமார் 100 எரிபொருள் நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கப்படும். இதற்காக கடற்றொழில் அதிகாரிகளின் பரிந்துரை அவசியமாகும்.

ஒரு படகிற்கு ஒரு நாளைக்கு 25 லீற்றர் வீதம், 5 நாள்களுக்கு ஒருமுறை எரிபொருள் விநியோகிக்கப்படும்.

நெடுந்தீவு மற்றும் பத்தலங்குண்டுவ போன்ற தொலைதூரப் பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர்களின் தேவைகளுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதன்கிழமைகளில் விடுமுறை வழங்குமாறு தனியார்துறையை கட்டாயப்படுத்தவில்லை


கொழும்பு, மார்ச் 19

புதன்கிழமைகளில் விடுமுறை வழங்குமாறு தனியார் துறையினரை அரசாங்கம் கட்டாயப்படுத்தவில்லை. எனினும், அரச அலுவலகங்களின் வேலைத்திட்டத்துடன் ஒத்துப்போகக்கூடிய நிறுவனங்கள் இதனைப் பரிசீலிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் பலவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்குதாரர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், திடீரென விடுமுறையை அமுல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளது.

இந்தத் தீர்மானமானது தொழிலாளர் உரிமைகள் மற்றும் தொழில்துறைகளில் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கம் ஆகிய இரண்டையும் சமமாக ஆராய்ந்த பின்னரே எடுக்கப்பட வேண்டும் என செயலாளர் சுட்டிக்காட்டினார். நாட்டில் நிலவும் தற் போதைய சூழலைக் கருத்திற் கொண்டு, அரச அலுவலகங்களுக்கு நேற்று முதல் புதன் கிழமைகளில் விடுமுறை வழங்கப்படுவதாக கடந்த 16ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். மதிப்புக் கூடும்.

**இடபம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப் பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட் டிப்பு லாபம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்க ளின் பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலு வல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும்.

# ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை செயலாளர் அலி லரிஜானி கொலை!

## உறுதிப்படுத்தியது ஈரான் அரசு

தெஹ்ரான், மார்ச் 19

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை செயலாளர் அலி லரிஜானி கொல்லப்பட்டதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரானின் உயர்மட்ட தேசிய பாதுகாப்புச் சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், லரிஜானியின் மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளதுடன், ஈரான் நாட்டுக்காக அவர் ஆற்றிய சேவைகளையும் பாராட்டியுள்ளது.

ஈரானின் முக்கிய பாதுகாப்பு அதிகாரியான அலி லரிஜானி கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு நேற்று முன் தினம் அறிவித்திருந்தது.

ஈரானின் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் மிக முக்கியமான நபராக அவர் விளங்கியதால், அவரது மரணம் தற்போதைய போர்ச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அலி லரிஜானி, 2025 ஒகஸ்ட் மாதம் ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன், அவர் ஈரான் ஜனாதிபதியினதும் மற்றும் மறைந்த ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியினதும் பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச மருந்தாளர்களின் பிரச்னைகள் வடக்கு ஆளுநர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை அரசாங்க மருந்தாளர் சங்கத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பிராந்திய மருந்தாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும், வவுனியா மற்றும் தெல்லிப்பளைக்கு விசேட தர ஆளணியை உருவாக்க வேண்டும் எனவும் அரசாங்க மருந்தாளர் சங்கத்தினரால் ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தற்போது வெற்றிடமாக உள்ள 14 அரசாங்க மருந்தாளர்கள் மற்றும் 89 மருந்து வழங்குபவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

மருந்து களஞ்சியறைகளின் தேவைகள் மற்றும் மருந்து விநியோக வாகனங்களின் பற்றாக்குறை தொடர்பிலும் சங்கப் பிரதிநிதிகளால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இக் கோரிக்கைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துத் தேவையான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்த ஆளுநர், தெல்லிப்பளை மற்றும் சாவகச்சேரியில் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவுகளுக்கான மருந்து களஞ்சியங்களின் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை அரசாங்க மருந்தாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான கோரிக்கை விரிவாக ஆராயப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளரின் தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு, நிரல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாகாத வகையில் இக்கோரிக்கையை ஆராய்ந்து பொருத்தமான தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

# இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 வீதத்தால் வளர்ச்சி

கொழும்பு, மார்ச் 19

2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு மற்றும் முழு ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் நிலையான விலையில் 2015 ஆம் ஆண்டு 1 கோடி 25 இலட்சத்து 8 ஆயிரத்து 954 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2025 ஆம் ஆண்டில் 1 கோடி 31 இலட்சத்து 28 ஆயிரத்து 577 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இது 5 வீத வளர்ச்சி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் பிரதான மூன்று துறைகளான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் முறையே 2025 ஆம் ஆண்டில் 1.4 வீதம், 7.8 வீதம் மற்றும் 3.3 வீதம் என்ற வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4.8 வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது ஆண்டிறுதியில் பொருளாதார நடவடிக்கைகளின் நேரடி வளர்ச்சியைக் காட்டுவதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையை வந்தடையவுள்ள அமெ. ஹெலிகள்!

கொழும்பு, மார்ச் 19

அமெரிக்க அரசாங்கம் பத்து ரி.எச்.-57 சீ ரேஞ்சர் ஹெலிகொப்டர்களை இலங்கை விமானப்படைக்கு வழங்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

நன்கொடையாகப் பெறப்பட்ட ரி.எச்.-57 சீ ரேஞ்சர் ஹெலிகொப்டர்களின் தொகுதி, அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றதாக வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியது.

இருதரப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த ஹெலிகொப்டர்கள், இலங்கை விமானப்படை விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், அதன் செயல்பாட்டுக் குழுவில் பயன்படுத்தவும், பேரிடர் மீட்பு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்காகவும் பயன்படுத்தப்படும். (அ)

# ரூபா 105 மில்லியன் பெறுமதியுடைய போதைப்பொருளுடன் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 19

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 105.22 மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருட்களைக் கடத்த முற்பட்ட இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹக்மனாவைச் சேர்ந்த 20 வயது தொழிலதிபரும், அக்குன கொலபெலஸ்ஸவில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பயிலும் 22 வயது தாதிய மாணவியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

தாய் எயார்வேஸ் விமானம் மூலம் தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து நேற்று அதிகாலை 1.00 மணிக்கு இருவரும் கட்டுநாயக்க வந்தடைந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 10 கிலோ 552 கிராம் எடை கொண்ட குஷ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அங்கு அவர்களைக் காவலில் வைப்பதற்கான உத்தரவுகள் பெறப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்!

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திக குமாரி லியனகே தெரிவித்தார்.

முடிவுகளை வெளியிடுவதற்கான தேவையான செயல்முறைகள் தற்போது நிறைவடையும் தறுவாயில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப் பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாக ஆணையளர் மேலும் குறிப்பிட்டார்.

சாதாரண தரப் பரீட்சைக்கான நடைமுறைப் பரீட்சைகளை ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நடைமுறைப் பரீட்சைகள் முடிந்தவுடன் சாதாரண பரீட்சை முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# அனுமதியின்றி ட்ரோன்களை பறக்கவிட்டால் நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 19

முறையான அனுமதி இல்லாமல் நாட்டில் ட்ரோன்களைப் பறக்கவிடுவது தடை செய்யப்பட்டுள்ளது என உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நபர்களுக்கு நினைவூட்டும் பொது அறிவிப்பை இலங்கை விமானப் படை வெளியிட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு பகுதிகளில் அனுமதியின்றி ட்ரோன்களை இயக்கிய நபர்கள் மீது இதற்கு முன்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ட்ரோன்களை இயக்க விரும்பும் எவரும், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க தேவையான அனுமதிகளைப் பெறவேண்டும்.

இந்த அறிவிப்பின் நோக்கம், ட்ரோன் இயக்குபவர்களுக்கு ஏற்படும் சட்டச் சிக்கல்களையும் சிரமங்களையும் தடுப்பதோடு, தேசியப் பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும் என்று இலங்கை விமானப்படை அந்த அறிவிப்பில் மேலும் கூறியுள்ளது. (அ)

# கியூ.ஆர். குறியீட்டை பெற்றுக்கொள்ள விசேட வட்ஸ்அப் இலக்கம் அறிமுகம்!

கொழும்பு, மார்ச் 19

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் அல்லது ஞசு குறியீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான பதிவுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு விசேட வட்ஸ்அப் இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

பதிவு செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்கும் நபர்கள், 076 000 19 19 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு வாகன இலக்கத்தை அனுப்பி வைப்பதன் மூலம் தமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, தேசிய அடையாள அட்டை, சாரதி உரிமம் அல்லது கடவுச்சீட்டு, செல்லுபடியாகும் வருமான வரி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் புகைப்படங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் என்பதுடன், வழங்கப்படக்கூடிய அனைத்துத் தகவல்களும் தனிப்பட்ட தரவுகளும் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமையப் பாதுகாக்கப்படும் என டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஒன்லைன் வணிகங்கள், கூரியர் சேவை நிறுவனங்களுக்கு புதிய பதிவுத் திட்டம்

கொழும்பு, மார்ச் 19

ஒன்லைன் வணிகங்கள் மற்றும் கூரியர் சேவை வழங்குநர்களுக்கான பதிவு முறையை அறிமுகப்படுத்த உள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க அறிவித்துள்ளார்.

உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், இந்த நடவடிக்கை நுகர்வோரைக் பாதுகாக்கவும், ஆன்லைன் தளங்கள் வழியாக விற்பனை செய்யப்படும் பொருள்களின் தரத்தை உறுதி செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒன்லைன் சந்தைப்படுத்தல் வேகமாக வளர்ந்து வருவதால் குறைந்த விலையில் பொருள்களை வழங்கும் வலையமைப்புகள் உருவாகியுள்ளன. ஆனால் சில சந்தர்ப்பங்களில், நுகர்வோருக்கு எதிர்பார்த்த தரம் இல்லாத பொருள்கள் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

"ஒன்லைன் வணிகம் விரிவடையும் நிலையில், நுகர்வோருக்கு தரமான பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்வது அவசியம். தரமற்ற பொருள்கள் ஒன்லைன் தளங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் சம்பவங்களை நாங்கள் நெருக்கமாக கண்காணித்து வருகிறோம்," என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்புக்கான விமான சேவைகளை மீள தொடங்கும் பிரிட்டிஷ் எயார்வேஸ்!

கொழும்பு, மார்ச் 19

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் கொழும்புக்கான விமான சேவைகளை மீண்டும் தொடங்கவுள்ளதாக பிரிட்டிஷ் எயார்வேஸ் அறிவித்துள்ளது.

அதன்படி, 2026 ஒக்டோபர் 23 முதல், லண்டன் கேட்விக் விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு வாரத்திற்கு மூன்று முறை விமானங்களை இயக்கவுள்ளதாக பிரிட்டிஷ் எயார்வேஸ் தெரிவித்துள்ளது.

இந்த வழித்தடம் குளிர்காலப் பருவத்தில் மட்டுமே இயக்கப்படும்.

இது, எழில்மிகு கடற்கரைகள், ரம்மியமான வனவிலங்குகள், துடிப்பான கலாசாரம் மற்றும் செழுமையான உணவு வகைகளுக்குப் புகழ்பெற்ற இலங்கைக்குப் பயணிகளை நேரடியாக அழைத்துச் செல்லும்.

இலங்கை தவிர பிரிட்டிஷ் எயார்வேஸ், 2026-ஆம் ஆண்டு குளிர்காலத்தில் தனது சேவை வலையமைப்பை கணிசமாக விரிவுபடுத்தும் திட்டத்தை அறிவித்துள்ளது. (அ)

# சுற்றுலாத்துறை வாகனங்களுக்கு தடையின்றி எரிபொருள் வழங்கல்!

கொழும்பு, மார்ச் 19

மத்திய கிழக்கு நெருக்கடி காரணமாக ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டிலிருந்து சுற்றுலாத்துறையைப் பாதுகாக்கவும், அத்துறையின் தேவைகளைத் தடையின்றி பூர்த்தி செய்யவும் விசேட நிகழ்நிலை தளம் ஒன்றை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கும் வகையில் கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான பொறிமுறையொன்று இந்த புதிய முறையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையோடு தொடர்புடைய வாகன உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்கள், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட **tourismfuel.sltda.gov.lk** என்ற இணையத் தளத்தின் ஊடாகப் பதிவு செய்து, தமக்குத் தேவையான எரிபொருள் ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவன் ரணசிங்க, நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் சுற்றுலாத்துறையின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை பிரதேச செயலாளர் மக்களின் அழைப்பை ஏற்க மறுப்பு

## கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர் குறித்தும் விசனம்

அம்பாறை, மார்ச் 19

சம்மாந்துறை மக்கள் தங்களின் முக்கிய பிரச்சினைகளை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபாவிடம் தெரிவிப்பதற்காக அவரது அலைபேசிக்கு பலமுறை அழைப்பை ஏற்படுத்தியும் அவர், அந்த அழைப்பை ஏற்கவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட டித்வா வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட எங்களின் தகவல்களை கிராம சேவகர்கள் சரியாக வழங்காமையினால் அரசினால் வழங்கப்பட்ட பணம் எங்களுக்கு கிடைக்காமல் போய் விட்டது. அதனால் அவர்கள் மீது வைத்த நம்பிக்கையை நாங்கள் இழந்து விட்டோம். இதனாலேயே பிரதேச செயலாளர் ஹனிபாவை தொடர்புகொள்ள நாங்கள் அழைப்பை ஏற்படுத்தினோம். அவரும் அவ்வாறே இருக்கின்றார் என்று அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், எங்களின் பிரச்னைகளையும், கிராம சேவகர் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களினால் ஏற்படும் அநீதி பற்றிய விடயங்களை தெரிவிப்பதற்காகவே நாங்கள் அழைப்பை ஏற்படுத்துகிறோம். மாறாக அவருடன் பொழுது போக்குக்காகவோ, அல்லது விளையாட்டுக்காகவோ அழைப்பை ஏற்படுத்துவதில்லை என்றும் அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில், குறித்த பிரதேச செயலாளர் ஹனிபாவை தொடர்புகொள்ள முயற்சி செய்தும் அதற்கும் அவர் பதிலளிக்கவில்லை. (அ)

# குருக்கள்மடம் மனிதப் புதைகுழி; நீதிபதி தலைமையில் கள ஆய்வு



மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு குருக்கள்மடம் சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழி பிரதேசத்தை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆராய்ந்தார்.

நேற்று முன் தினம் குருக்கள் மடம் மனித புதைகுழி சந்தேகத்திற்கிடமான இடத்தினை நீதிபதி, சட்டத்தரணிகள் உள்ளிட்ட குழுவினர் விசேட கள விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தனர்.

1990 ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரை முடித்து கல்முனை வழியாக காத்தான்குடி நோக்கிப் பயணித்த முஸ்லிம் பயணிகள் விடுதலைப்புலிகளினால் இடை மறிக்கப்பட்டு குருக்கள்மடம் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கில் முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கின் ஒரு பகுதியாக, களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில், பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி முபாறக் முஅஸ்லம், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் குருக்கள் மடத்தில் உள்ள மனித புதைகுழி சந்தேகத்திற்கிடமான இடத்தை நேரில் பார்வையிட்டனர்.

சம்பந்தப்பட்ட இடம் தற்போது பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த மனித புதைகுழி தொடர்பான முதல் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சட்டத்தரணி முபாறக் முஅஸ்லம் தெரிவித்தார். (அ)

# மத்திய, தென், ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, மார்ச். 19

மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் எனவும் அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# பனங்காடு பாலத்தடியில் ஆணின் சடலம் மீட்பு!

அம்பாறை, மார்ச் 19

பனங்காடு பாலத்தடியில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை அடையாளம் காண அக்கரைப்பற்று பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனங்காடு பாலத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் நேற்று புதன்கிழமை ஆணின் சடலம் அக்கரைப்பற்று பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

ஆணின் சடலமொன்று மிதந்த நிலையில் கிடப்பதாக குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் முதலை கடித்து உள்ளதா? அல்லது தற்கொலையா அல்லது கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளதா என அங்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 5 அடி 6 அங்குலம் உயரம் மற்றும் சுமார் 45 வயது முதல் 50 வயது வரை மதிக்கத்தக்க சடலத்தை அக்கரைப்பற்று பொலிஸாருடன் இணைந்து அம்பாறை தடயவியல் பிரிவு பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் கரைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுத்தனர்.

சடலம் இனங்காண முடியாத வகையில் சிதைந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# தொல்பொருள்களை கடத்திச் சென்ற ஐந்து சந்தேக நபர்களிடம் விசாரணை



அம்பாறை, மார்ச் 19

தொல்பொருள் மதிப்புள்ள பொருட்களுடன் முச்சக்கர வண்டியில் வைத்து கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவல் ஒன்றிற்கமைய அம்பாறை மாவட்டம் தெஹியத்தகண்டி பொலிஸ் பிரிவில் உள்ள சல்பிட்டிகம-சந்துன்புர வீதியில் வீதி தடைகளைப் பயன்படுத்தி பொலிஸ் குழுவினர் ஒரு முச்சக்கர வண்டியைச் சோதனையிட்டபோது தொல்பொருள் மதிப்புள்ள பொருட்களுடன் ஐந்து பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வசம் இருந்து ஒரு புத்தர் சிலையும் இரத்தினக்கற்கள் என சந்தேகிக்கப்படும் 3 நீலக்கற்களும் முச்சக்கர வண்டியும் மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூன்று பெண் சந்தேக நபர்கள் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பிபில மற்றும் மினிப்பே பகுதிகளைச் சேர்ந்த 32 முதல் 62 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். பெண் சந்தேக நபர்கள் மஹியங்கனை மற்றும் ரிதீமாலியத்த பகுதிகளைச் சேர்ந்த 26,53 மற்றும் 55 வயதுடையவர்கள் ஆவர்.

பொலிஸார் மேற்கொண்ட கைது நடவடிக்கையின்போது ஒரு சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெஹியத்த கண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளனர். (அ)

# கிழக்கு ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல்



திருமலை, மார்ச் 19

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில், கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தற்போதைய உலகளாவிய நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக அரசாங்கத்தால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு இணங்க, பொதுத் துறைக்குள் உள்ள அரசாங்க நிறுவனங்களுடனும் பொதுமக்களுடனும் ஈடுபடுவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக, அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காக அலுவலகங்களைப் பராமரித்தல், கொண்டாட்டங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் எரிபொருள் நுகர்வு போன்ற பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. (அ)

# பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுக்கான பயங்கரவாதச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் புகாரி முகம்மட் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த செயலமர்வின்போது, இலங்கையில் நீண்ட காலமாக விவாதத்திற்குள்ளாகி வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள அரசாங்கத்தை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இதில் பிரபல சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான் வளவாளராக கலந்து... (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பிரசாரத்துக்காக...

குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த காலத்தில் அரபு நாடுகளின் அழுத்தத்தினாலும் உள்நாட்டு எதிர்ப்பினாலும் கொழும்பில் செயல்பட்ட இஸ்ரேலின் " இன்ரெரெஸ்ட்ஸ் செக்சன்" அலுவலகத்தை மூட வேண்டும் என்ற அழுத்தம் இலங்கை அரசாங்கத்தின் மீது இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1970ஆம் ஆண்டு அரபு நாடுகளின் அழுத்தத்தின் காரணமாக இலங்கை இஸ்ரேலுடன் கொண்டிருந்த தூதரக உறவுகளை துண்டித்திருந்தது. பின்னர், உள்நாட்டுப் போரின் தீவிரம் அதிகரித்த நிலையில் 1984ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலின் " இன்ரெரெஸ்ட்ஸ் செக்சன்" திறக்கப்பட்டதன் மூலம் உறவுகள் பகுதி அளவில் மீண்டும் தொடங்கப்பட்டன.

1980களின் இறுதிக்குள், சுமார் 30 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இராணுவ உபகரணங்களை இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கியதாகவும் ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இதில் டோறா வகை அதிவேக கடற்படை படகுகள், மினி துப்பாக்கிகள், மின்னணு வேலிகள், தொடர்பு அமைப்புகள் மற்றும் குண்டு - துப்பாக்கி வெடிபொருட்கள் உள்ளிட்டவை அடங்கும்.

மேலும், இஸ்ரேல் பயிற்றுவிப்பாளர்கள் இலங்கை இராணுவத்தினருக்கும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கும் பயிற்சி வழங்கியதாகவும், சில நேரங்களில் அவர்கள் வேளாண்மை ஆலோசகர்களாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததாகவும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் நடைபெற்ற நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படை பிரிவிற்கும் இஸ்ரேல் பயிற்சி வழங்கியதாகவும் ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 1987ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கு எதிரான கொலை முயற்சிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அதிமுக்கிய பிரமுகர் பாதுகாப்புப் பிரிவிற்கும் பயிற்சி வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், ஜே.ஆர். ஜெயவர்தன கோரிய 1 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உண்மையில் வழங்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரம் இந்த ஆவணங்களில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள், இலங்கையின் உள்நாட்டுப் போரின் மிகவும் பதற்றமான காலகட்டத்தில் இலங்கை-இஸ்ரேல் உறவுகள் எவ்வளவு நெருக்கமாக இருந்தன என்பதையும், அந்த உறவுகளை வடிவமைத்த புவிசார் அரசியல் காரணிகளையும் வெளிப்படுத்துகின்றன. (அ)

## நிலக்கரி...

நிலக்கரி இறக்குமதி செயல்முறையில் ஏற்பட்டுள்ள தாக்க் கூறப்படும் முறைகேடுகள் காரணமாக நாட்டிற்கு பெரிய அளவில் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக ரணவக்கா குற்றஞ்சாட்டினார். இந்த விவகாரம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இறக்குமதி செய்யப்பட்ட சில நிலக்கரி சரக்குகள் தர நிலைகளை பூர்த்தி செய்யாததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலக்கரி பெரும்பாலும் லக்விஜய மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன.

இந்த விவகாரம் குறித்து உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு உண்மை நிலை வெளிப்படையாக தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## எரிபொருள்...

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, பின்வரும் இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு உரிய தகவல்களை வழங்குமாறு பொதுமக்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

தொலைபேசி இலக்கங்கள்: 0112106767 / 0117296130.

## 3 பேரை விசாரணைக்கு...

அறிவித்துள்ளனர்.

மாணவர்களை அச்சுறுத்தும் விதமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட மூன்று மாணவர்களை குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளதாகவும், இன்று அந்த விசாரணைக்குச் செல்லுமாறும் பல்கலைக்கழக அதிகாரிகளால் தாம் பணிக்கப்பட்டதைக் கண்டித்தே எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை முதல் அனைத்துப் பீடங்களிலும் கல்வி நடவடிக்கைகளுக்குச் செல்லாமல் புறக்கணிப்பில் ஈடுபடுவதுடன், காலை 10 மணி முதல் பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலுக்கு முன்னால் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் நேற்றுரவு மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் தமக்கு ஆதரவு வழங்குமாறு மாணவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பல இடங்களில்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, வடமத்திய, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பத்தின் அளவு அவதானமிக்க மட்டத்திற்கு அதிகரிக்கக்கூடும்

எனவே, பொதுமக்கள் போதியளவு நீரை அருந்துவதுடன், தேவையற்ற வகையில் வெயிலில் நடமாடுவதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

## இலங்கை...

தடையின்றி தொடர்வதையும் முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்குவதையும் உறுதி செய்ய அவசர மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியம் என சபை வலியுறுத்தியுள்ளது.

அதன்படி, எரிபொருள் மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்கீட்டிற்காக அத்தியாவசிய சேவைகள் மற்றும் முன்னுரிமை பொருளாதார துறைகளை அடையாளம் காண வேண்டும் என முதல் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், எரிபொருள் கொள்முதல் மூலங்களை விரிவுபடுத்தி, நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் சேவையைத் தொடர விமான எரிபொருள் கிடைப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் மற்றும் சுற்றுலா துறைக்கு தேவையான எரிபொருளை வெளிநாட்டு நாணய அடிப்படையில் சுயமாக இறக்குமதி செய்ய அனுமதிக்க உள்ளூர் பங்கரிங் நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் எனவும் சபை பரிந்துரைத்துள்ளது.

எரிபொருள் பயன்பாட்டை குறைக்கும் நோக்கில் வீட்டிலிருந்து பணிபுரியும் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதுடன், அவுருது விடுமுறையை முன்னிட்டு பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை முன்கூட்டியே மூடி தற்காலிக ஆன்லைன் கற்றல் முறைகளை பரிசீலிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இறுதியாக, அத்தியாவசியமற்ற வெளிநாட்டு நாணய வெளியேற்றங்களை கட்டுப்படுத்தி, எரிபொருள், உணவு, மருந்துகள் மற்றும் ஏற்றுமதி தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் இலங்கை வர்த்தகச் சபை தெரிவித்துள்ளது.

உலகளாவிய அதிர்வுகளை சமாளிக்க அரசாங்கமும் தனியார் துறையும் நெருக்கமாக இணைந்து செயல்படுவது மிக முக்கியம் என சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

## வீரவிலவில்...

நேர் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 40இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த பேருந்தும், திஸ்ஸமஹாராமயவிலிருந்து கராப்பிட்டிய நோக்கிப் பயணித்த பேருந்தும் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது. (அ)

## இந்து சமுத்திரம்...

தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற வியோன் சர்வதேச மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

உலகளாவிய கட்டமைப்பு ஒரு வலுவான மாற்றத்திற்கு உள்ளாகி வரும் தருணத்தில் நாம் இன்று சந்திக்கிறோம்.

வர்த்தகப் பாதைகள் முடக்கப்படுகின்றன. தொழில்நுட்பப் போட்டி நாடுகளுக்கு இடையிலான அதிகாரச் சமநிலையை மீண்டும் வடிவமைத்து வருகின்றது. உலகின் பல்வேறு பகுதிகளில் போர்கள் தொடர்ந்து நீடிக்கின்றன. பனிப்போருக்குப் பிந்தைய உலகமாக இப்போது மாறிக்கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் தூரமானதாக அல்லது இரண்டாம் நிலையாகக் கருதப்பட்ட மூலோபாய வலயங்கள் இப்போது உலக அரசியலின் மையப்புள்ளிகளாக மாறி வருகின்றன. அத்தகைய ஒரு வலயமே இந்தியப் பெருங்கடல்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடல் மோதல் வலயமாக அன்றி, நாகரிகங்களுக்கு இடையிலான ஒரு பாலமாகவே இருந்தது.

இந்தியப் பெருங்கடல் சமூகங்களைப் பிரிப்பதற்குப் பதிலாக அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்தது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு அந்தத் தொடர்பின் பழமையான உதாரணங்களில் ஒன்றாகும்.

உலகளாவிய மசகு எண்ணெய் கப்பல் போக்குவரத்துகளில் மூன்றில் இரண்டு பங்கு இந்தக் கடல் வழியாகவே பயணிக்கிறது. அத்துடன் உலகின் கொள்கலன் போக்குவரத்தில் பாதியளவு கடல் மார்க்கமாகவே நடைபெறுகிறது.

இந்தப் பாதைகளுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும் போது, அதன் விளைவுகளை முழு உலகமும் உணரும். அண்மைய உலகளாவிய நிகழ்வுகள் இந்த ஸ்திரத்தன்மை எவ்வளவு பலவீனமாக இருக்கக்கூடும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன.

மத்திய கிழக்கில் நிலவும் அமைதியின்மை எரிசக்தி சந்தை மற்றும் உலகளாவிய பாதுகாப்பில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அதேவேளை, பிரதான அதிகார நாடுகளுக்கு இடையிலான மூலோபாய போட்டிகள் கடல் வலயங்களுக்குள் பெருகிய முறையில் தென்படுகின்றன. இதன் காரணமாகவே, இந்தியப் பெருங்கடலின் ஸ்திரத்தன்மை மீண்டும் ஒருமுறை தீர்க்கமானதாக மாறியுள்ளது.

மூலோபாய ரீதியாக உணர்வுபூர்வமான வலயங்களில் அமைந்துள்ள நாடுகள், தமது வெளிநாட்டுக் கொள்கையை சமநிலை, தொலைநோக்கு பார்வை மற்றும் ஒழுக்கத்துடன் முன்னெடுக்க வேண்டும். எமது இறையாண்மையைப் பாதுகாப்பதோடு எமது கடல் வலயங்களையும் நாம் பாதுகாக்கவேண்டும்.

இலங்கையின் மூலோபாய இருப்பிடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திகளுக்குப் பக்கபலமாக அமைகின்றன. எமது இரு நாடுகளும் இணைந்து பிராந்திய ஸ்திரத்தன்மையையும் செழிப்பையும் பலப்படுத்த முடியும்-என்றார். (அ)

## குமார ஜயக்கொடி...

இதற்கான பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியின் 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை கையொப்பமிட்டுள்ளனர்.

இதன்படி குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை இன்று சபாநாயகரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## நான் சொன்னதை...

மாறாக அவற்றை ஒருபோதும் சுயநல அரசியலுக்காக முன்னெடுத்திருக்கவில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்திற்கான புதிய நிர்வாகம் குறித்த தொழிற்சங்கத்தின் ஸ்தாபகரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் நேற்று யாழில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப போராளிகளில் ஒருவனாக இருந்தவன்.

போராட்டம் பலவீனப்பட்டு திசை திரும்பிய போது இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அதனூடாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்கி மாகாண சபை முறைமையை கொண்டுவரப்பட்டது.

போராட்டம் பலவீனமடைந்துபோன நிலையில் உருவாக்கப்பட்ட இந்த மாகாண சபை முறைமைக்கு ஊடாகத்தான் நாம் எமது நகர்வுகளை முன்கொண்டு செல்ல வேண்டும் என அன்றிலிருந்து இன்றுவரை நான் வலியுறுத்தி வந்து கொண்டிருக்கின்றேன்.

ஆனால் எனது அந்தக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் முழுமையாகக் கொண்டு செல்லப்படாத நிலை காணப்பட்டது. மாறாக வன்முறையுடனான கருத்துக்களே வலுவாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

ஆனால் நான் அன்று சொன்ன கருத்துக்கள் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை காணப்படுகின்றது.

இதை அன்றே ஏற்றுக்கொண்டிருந்தால் இத்தனை அழிவுகளும் இழப்புக்களும் உருவாகியிருந்திருக்காது என்பதுதான் எனது வலுவான கருத்து.

இதேநேரம் நான் முன்வைத்திருந்த அரசியல் இலக்கு மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதாகும்.

இதுதான் சமஷ்டியும் கூட. இந்த கருத்துக்கு தென்னிலங்கையில் எந்த எதிர்ப்பும் கிடையாது. இதை அடைவதே எமது நோக்கமும் ஆகும் - என்றார். (அ)

## உண்மைகளை...

சீர்கேடுகள் மற்றும் பொருளாதாரக் கையாளுகை குறித்துக் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நெருக்கடி காலத்தில் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டுச் சென்றார் என்பதைச் சுட்டிக்காட்டிய ஹரீன், ஆனால் தற்போதைய ஜனாதிபதிக்குத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதவாறு தப்பியோட வேண்டிய நிலையே ஏற்படும் என எச்சரித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காகப் பெரும் போராட்டத்திற்கு மத்தியில் சேமித்து வைத்துவிட்டுச் சென்ற 6 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி கையிருப்பு மாத்திரமே இன்று எஞ்சியுள்ள ஒரே பலம் என்றும், அதனைத் தவிர இந்த அரசாங்கத்திடம் எந்தவொரு நிதி மேலாண்மைத் திட்டமும் இல்லை என்றும் அவர் சாடினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## விடுமுறை நாட்களிலும் பணி;

# மேலதிக கொடுப்பனவு, சலுகை கோருகின்றது சுகாதாரத்துறை!

கொழும்பு, மார்ச் 19

சுகாதாரத்துறையை அத்தியாவசிய சேவையாகக் கருதுவதானால், அதனை வழங்கும் ஊழியர்களுக்கும் முறையான சலுகைகள் வழங்கப்படவேண்டும் என சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து கவலை வெளியிட்டுள்ள அவர், சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

இதன்படி புதன்கிழமை போன்ற பொது விடுமுறை நாள்களில் சுகாதார ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்படும்போது, அவர்களுக்குரிய விடுமுறை கொடுப்பனவு முறையாக வழங்கப்படவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

மேலும் ஏனைய தனியார் வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் அதே அளவிலான எரிபொருள் ஒதுக்கீட்டை சுகாதார ஊழியர்களுக்கும் வழங்குவது முறையற்றது. தடையில்லா சேவையை உறுதிப்படுத்த சுகாதாரத்துறைக்கு என பிரத்தியேக எரிபொருள் ஒதுக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்படவேண்டும் என அவர் கூறினார்.

அத்துடன் ஏனைய துறைகளுக்கு விடுமுறை அளித்துவிட்டு, சுகாதாரத்துறையினரை மட்டும் வழமை போல் பணியாற்றுமாறு கோருவது முரணானது. மேலும் நோயாளர்களுக்கு விடுமுறை நாட்களில் சிகிச்சை தேவைப்படாது என அதிகாரிகள் கருதுகிறார்களா என அவர் கேள்வி எழுப்பினார். (அ)

## மத்திய கிழக்கு மோதல் நிலை;

# இலங்கையர்களை பாதுகாக்க அரசால் விசேட நடவடிக்கைகள்

கொழும்பு, மார்ச் 19

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுமாக இருந்தால் அது குறித்து ஆராய விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜினி சாவத்திரி போல்ராஜ் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பொதுமக்கள் அனைவரும் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# "காவிய நாயகன்" திருப்பாடுகளின் நாடகம் 26ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு "காவிய நாயகன்" என்னும் பெயரில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

இம்முறை மேடையேற்றப்படும் "காவிய நாயகன்" திருப்பாடுகளின் நாடகம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகி முதன்முதலாக 2001ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2004, 2008, 2013, 2022 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது ஆறாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் அரங்கக் கலைஞர்களில் ஒருவரான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் மேற்கொண்டுள்ளார். (அ)

# அத்தியாவசிய பொருள்களின் விலைகளில் திடீர் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நிலைமைக்கு மத்தியில் அத்தியாவசியப் பொருட்களின் மொத்த விலைகளில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சரக்குக் கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் மொத்த விலைகள் சிறிதளவு உயர்ந்துள்ளன.

பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் கடை உரிமையாளர்களும் மொத்த வியாபாரிகளும் தேவையற்ற முறையில் பொருள்களைப் பதுக்கி வைக்கவேண்டிய அவசியமில்லை - என்றார். (அ)

# வாகன போக்குவரத்து முடக்கப்படலாம் ரயில் சேவையை வலுப்படுத்தவேண்டும்

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, மார்ச் 19

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை அதிகரிப்பு, விநியோகப் பாதைகளில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் எரிபொருள் வழங்கும் நாடுகளுக்கு இடையே ஏற்படக்கூடிய ஸ்திரமற்ற நிலைமைகள் காரணமாக, இலங்கையிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, ரயில் சேவையை உடனடியாக வலுப்படுத்த வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அச்சங்கம், இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக்கூடும் என்பதை முன்கூட்டியே கணித்து, கடந்த 4ஆம் திகதி ரயில் திணைக்களத்துக்குத் தெளிவுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்போது தனிப்பட்ட வாகனங்களின் பயன்பாடு குறைந்து, அலுவலகப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நாளாந்தம் பயணம் செய்யும் பொதுமக்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாக அமையும்.

குறிப்பாக, நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் நாளாந்த போக்குவரத்துத் தேவைகள் அதிகரிப்பதன் காரணமாக, தற்போதுள்ள பொதுப் போக்குவரத்து கட்டமைப்பின் மீதான அழுத்தம் அதிகரிக்கக்கூடும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரயில் சேவையை விரைவாக விரிவுபடுத்தி வலுப்படுத்துவது அவசியமான ஒன்றாகும் என கோரி ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# கியூ.ஆர். நடைமுறைச் சிக்கலை தீர்ப்பதற்கு 9 மாகாணங்களுக்கும் வட்ஸ்அப் இலக்கங்கள்

கொழும்பு, மார்ச் 19

எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ.ஆர் நடைமுறையில் நிலவும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒன்பது விசேட வட்ஸ்அப் இலக்கங்களை அறிமுகப்படுத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார, இதுவரை சுமார் 6 இலட்சம் தவறான கியூ.ஆர். குறியீடுகளில் காணப்பட்ட பிழைகள் திருத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், கியூ.ஆர். குறியீடு இல்லை எனக் கூறி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் நபர்களைக் கண்டறிவதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி பள்ளிக்குடா பகுதியில் 2000 கடலட்டைகளுடன் மூவர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 19



கிளிநொச்சியின் பள்ளிக்குடா பகுதியில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட சுமார் 2000 கடல் அட்டைகளுடன் மூன்று சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கடற்படை கட்டளையின் "இலங்கை கடற்படை கப்பல் வேலுசுமண" பிரிவின் பள்ளிக்குடா கடற்படை வரிசைப் படுத்தல் பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பள்ளிக்குடா பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த கப் வாகனம் ஒன்றைக் கடற்படையினர் வழிமறித்துச் சோதனை செய்தனர்.

இதன்போது, எவ்விதமான சட்டபூர்வ அனுமதியுமின்றி கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2000 கடல் அட்டைகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து, குறித்த வாகனத்துடன் மூன்று சந்தேகநபர்களும் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 23 முதல் 54 வயதுக்குட்பட்ட கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் கப் வாகனம் என்பவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள் கிளிநொச்சி மாவட்ட மீன்பிடி நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# 134 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 19

ஒழுங்கமைக்கப்பட்ட இணையவழி மோசடி வலையமைப்பை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, அனுராதபுரம் மற்றும் மிஹிந்தலை பகுதிகளில் 134 வெளிநாட்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில், இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கையின்போது, இரு பகுதிக ளிலும் அமைந்திருந்த ஐந்து தங்குமிட விடுதி களில் ஒருங்கிணைந்த சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இவ் விடுதிகளில் தங்கியிருந்து இணையவழி மோசடி செயல்பாடுகளில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டோரில் 126 பேர் சீன நாட்டவர்கள் எனவும் 4 பேர் மியன்மார் நாட்டவர்கள் எனவும் 4 பேர் தாய்வான் நாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org